# 'Vast opportunities for women in mechanical engineering'

EXPRESS NEWS SERVICE @ Madurai

VICE Chancellor of Anna University M K Surappa said that the female students had vast opportunities in mechanical engineering.

Inaugurating 'Women in Mechanical Engineering (Win-Mech)' at K L N College of Engineering in Sivaganga on Saturday, Surappa said that people in general had a wrong perception that mechanical engineers had to work on field. "Due to this, female students hesitate to join the course. But, mechanical engineering also includes desk jobs as in software field and female candidates have more opportunities when compared to men," he said.

Win-Mech was organised by KLN College in collaboration with the Centre for University - Industry Collaboration(CUIC) of Anna University, Renault Nissan Technology and Business Centre India (RNTBCI).

The vice-chancellor also spoke about the significance of women education and appealed the students to become leaders by pursuing the field of engineering. He briefed the students about the government initiatives that would support women engineering students and also mentioned the vast openings for women graduates in the field of research.

RNTBCI Deputy Vice President Anantharaman Prakash briefed his company's CSR (Corporate Social Responsibility) of ₹18 lakh per year that supports Anna University students from financially poor background.

CUIC Director T Thyagarajan in his welcome address said that Win-Mech sensitisation programme for girl students studying XI and XII in government schools had started in August in Chennai, Coimbatore and Dindigul.

He further said that the programme would be held in Nagercoil on October and University would try to reach 1lakh female students across the State.

He added that around 1,600 female students benefited from the programme.

CUIC Additional Director T Kalaiselvan, Madurai District Chief Educational Officer Gopidas, K L N College Secretary and Correspondent K N K Ganesh, President K N K Karthik and school teachers also participated in the programme.

THE NEW INDIAN EXPRESS Sun, 02 September 2018
epaper.newindianexpress.com/c/31798618

# AU's sensitisation prog will reach out to 1 lakh girl students

TIMES NEWS NETWORK

> The programme will help in increasing the number of women employees in male dominated engineering fields

**Madurai:** The centre for university- industry collaboration (CUIC) of Anna University is planning to reach out to one lakh students under Win-Mech, a sensitisation programme for girl students in various courses of mechanical engineering stream in a years time. Talks with various industrial leaders to tap their funds under corporation social responsibility (CSR) was underway, said officials.

So far 7,000 students have been covered in various places like Chennai, Coimbatore, Dindigul and Madurai and next programme has been planned in Nagercoil. Additional director CUIC, T Kalaiselvan said that while 20-30% employees on shop floor in foreign countries are female, in India it is only 3-7%.

The programme will help in increasing the number of women employees in male dominated engineering fields. All the students, who underwent the sensitisation programmes have said that it has helped them drive away myths related to engineering courses and cleared their doubts on the future of engineering, when it comes to jobs.

Director of CUIC, Thyagarajan said that many companies are in need of women employees from the courses like mechanical, automobile, mechatronics, manufacturing, producing and industrial engineering, but not many girl students are there in campuses. The enrollment of girls in mechanical streams throughout Tamil Nadu is still in single digit, he said.

CUIC, with the help of funds under CSR from industries, is carrying out various programmes to help students from poor background. Training programmes are also conducted to increase the employability of select students to increase their chances of getting a job, he added.

Deputy vice president of Renault Nissan Technology and Business Centre, Anantharaman Prakash said that they are in need of women employees, since they can bring in innovative ideas. Fresh ideas are needed in the key areas of automobile industry like autonomous driving, connectivity, future growth and electrification, he said.

Secretary of KLN college of engineering, K N K Ganesh and president of the college K N K Karthik were also present during the sensitisation programme.

# இயந்திர பொறியியல் துறையில் பெண்கள் சாதிக்க

# மதுரை கே.எல்.என்.பொறியியல் கல்லூரியில் சிறப்பு பயிலரங்கம்



மதுரை, செப்.02-

உயர்ந்து வரும் வருவாயை அதிகரித்து, நடுத்தர வர்க்கம் மற்றும் இளைஞர்களின் தளத்தை விரிவுபடுத்துதல், திறமை வாய்ந்த மனிதவள மேம்பாடு மற்றும் தொழில்நுட்பத்தை வளர்த்தல் ஆகியவற்றிற்கும் மேலாக ஆட்டோமொபைல் துறையின் தேவை அதிகரித்து வருகிறது. இந்தியாவின் முதல் ஐந்து வாகன உற்பத்தியாளர்களுள் ஒன்றாக இந்தியா திகழ்கிறது.

நாட்டின் உற்பத்தித்துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 23.6 சதவிகிதம் ஆட்டோமொபைல் துறை மூலம் வருகின்றன. வாகன துறை நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை பெற்றுத் தரக்கூடிய துறைகளில் ஒன்றாகும். ஒரு கார் நிறுவனத்தில் உருவாக்கப்படும் ஒவ்வொரு பணி மூன்று முதல் ஐந்து மறைமுக துணை வேலைகளுக்கு வழிவகுக்கிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னை, திண்டுக்கல், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் நாகர்கோவிலில் (5 மண்டலங்கள்) இந்த உணர்திறன் திட்டம் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் 11வது மற்றும் 12வது வகுப்பு படிக்கும் 1000க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொள்கிறார்கள்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் 11வது மற்றும் 12 வது தரநிலை (கணிதம், இயற்பியல் மற்றும் வேதியியல்) படிக்கும் 7000 பள்ளி மாணவிகள் இந்த திட்டத்தால் பயனடைவார்கள். ஏற்கனவே சென்னை 1400 மாணவிகள் மற்றும் திண்டுக்கல் 1100 மாணவிகள் கோயம்புத்தூர் 1300 மாணவிகள் இந்த நிகழ்வில் பயனடைந்தார்கள். இது போன்ற நிகழ்ச்சி மதுரை கே.எல்.என்.பொறியியல் கல்லூரி, பொட்டப்பாளையத்தில் நடைபெற்றது மொத்தம் 60 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இருந்து மாணவிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்

. அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர்,பேராசிரியர். எம்.கே.சூரப்பா மேலாண்மை இயக்குநர்,. கிருஷ்ணன் சுந்தர்ராஜன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

அண்ணா பல்கலைக்கழக மற்றும் தொழில் கூட்டுறவு மையத்தின் இயக்குநர் தியாகராஜன் கூறுகையில்: 2020ஆம் ஆண்டில் இந்தியா முக்கிய ஆட்டோமொபைல் உற்பத்தி மையமாகவும், 2020 ஆம் ஆண்டின் வாகனங்களின் பயன்பாடு மற்றும் தேவைகளில் மூன்றாவது பெரிய சந்தையாகவும் எதிர்பார்க்கப்படுகிறது என டெலாய்டே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உலக அளவில் பெரிய கார் தயாரிப்பாளர்கள் இந்தியாவில் 30.5 மில்லியன் வாகனங்களை தயாரித்து வருகிறார்கள்.

2018 ஆம் ஆண்டின் இறுதியில் நான்காவது பெரிய ஆட்டோமொபைல் சந்தையாக இந்தியா மாறும் வாய்ப்பு உள்ளது. ஆட்டோமொபைல் துறை மற்றும் உற்பத்தி துறையில் வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க அனுமதிக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் பல பன்னாட்டு கார் தயாரிப்பாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக தொழில்துறை பல்வேறு துறைகளில் அதிக முதலீடு செய்ய தொடங்கி உள்ளனர்.

அண்ணா பல்கலைக்கழக மற்றும் தொழில் கூட்டுறவு மையத்தின் கூடுதல் இயக்குநர் கலைச்செல்வன் கூறுகையில்: -

இத்தகைய சூழலில் உருவாக இருக்கும் வேலை வாய்ப்புகளை கருத்தில் கொண்டு பல்கலைக்கழக மற்றும் தொழில் கூட்டுறவு மையம், அண்ணா பல்கலைக்கழகம் இந்த உணர்திறன் திட்டத்தை நடத்தி, மாணவ மாணவர்களை ஈர்க்கும் வகையில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிப்பை தேர்வு செய்து அதன் பின்னர் மெக்கானிக்கல் இன்ஜினியரிங், ஆட்டோமொபைல், மெக்கட்ரோனிக்ஸ், உற்பத்தி. தொழில்துறை பொறியியல் இருக்கும் வேலை வாய்ப்பு பற்றி மாணவிகள் அறிய இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

# ஒரு லட்சம் அரசு பள்ளி மாணவிகளுக்கு விழிப்புணர்வு

## அண்ணா பல்கலை இயக்குனர் தகவல்

மதுரை, செப். 2 – "தமிழகத்தில் ஒரு லட்சம் அரசு பள்ளி மாணவிகளுக்கு மெக்கானிக்கல் இன்ஜி., படிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்," என சென்னை அண்ணா பல்கலை மற்றும் தொழில் கூட்டுறவு மைய (சி.யு.ஐ.சி.) இயக்குனர் தியாகராஜன் தெரிவித்தார்.

மதுரையில் அவர் கூறியதாவது:

இந்தியா 2020ல் ஆட்டோமொபைல் உற்பத்தி மையமாகவும், வாகனங்களின் பயன்பாடு மற்றும் தேவைகளில் மூன்று பெரிய சந்தையாகவும் மாறும் வாய்ப்புள்ளது. தற்போது உலக அளவில் பெரிய கார் தயாரிப்பாளர்கள் இந்தியாவில் 2.08 கோடி வாகனங்கள் தயாரிக்கின்றனர். இந்தாண்டு இறுதியில் மூன்று பெரிய ஆட்டோமொபைல் சந்தையாக இந்தியா மாற வாய்ப்புள்ளது.

இதற்கு மெக்கானிக்கல் இன்ஜினியர் அதிகம் தேவை. இச்சூழலில் பல்கலை மற்றும் தொழில் கூட்டுறவு மையம் மற்றும் ரெனால்ட் நிசான் டெக்., நிறுவனத்துடன் இணைந்து பள்ளி அளவில் மாணவர்களிடையே மெக்கானிக்கல் இன்ஜி., படிப்பை தேர்வு செய்யவும், அதில் உள்ள வேலைவாய்ப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. நன்கு படிக்கும் ஏழை மாணவர்களுக்கு கார்ப்பரேட் நிறுவனங்களின் கல்வி உதவித் தொகையுடன் (சி.எஸ்.ஆர்.,) படிக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

சென்னை, கோவை, திண்டுக்கல், மதுரையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

ஒரு லட்சம் மாணவிகளுக்கு [illegible] விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும் பொறியியல் மாணவர்களுக்கு நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன் சார்ந்த பயிற்சி அளிக்கப்படுகின்றன. பிற நாடுகளில் பொறியியல் துறையில் பெண்கள் 30 சதவீதம் வரை வேலை வாய்ப்பு பெறுகின்றனர். ஆனால் இந்தியாவில் 7 சதவீதமே பெறுகின்றனர். இதை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.

# பெண்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரித்தால் சமூகமாற்றம் ஏற்படும்

## துணைவேந்தர் சுரப்பா நம்பிக்கை

மதுரை, செப். 2 –

"பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரித்தால் சமூக மாற்றம் ஏற்படும்," என சென்னை அண்ணா பல்கலை துணைவேந்தர் சுரப்பா தெரிவித்தார்.

மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் அண்ணா பல்கலையின் தொழில் கூட்டுறவு மையம் (சி.யு.ஐ.சி.,) சார்பில் அரசு மேல்நிலை பள்ளி மாணவிகளுக்கு மெக்கானிக்கல் இன்ஜி., படிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. சி.யு.ஐ.சி., இயக்குனர் தியாகராஜன் வரவேற்றார்.

துவக்கி வைத்து சுரப்பா பேசியதாவது:

பொறியியல் துறை தற்போது டிஜிட்டல் பரிமாற்றத்துடன் எளிமையாக மாறிவிட்டது. மெக்கானிக்கல் பிரிவு மட்டுமல்ல அனைத்து பொறியியல் பிரிவுகளிலும் எண்ணற்ற வாய்ப்புகள் பெண்களுக்கு உள்ளன. பொறியியல் படிப்பு குறித்து அரசும் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. ஆராய்ச்சி துறைகளிலும் பெண்கள் சாதிக்கின்றனர். ஆனால் உயர் கல்வி சேர்க்கையில் பெண்கள் பங்களிப்புக்கு ஏற்ப வேலைவாய்ப்பு இல்லை. ஐ.நா., மற்றும் பல நாடுகளில் தலைமை பொறுப்புக்கு பெண்கள் வரத்துவங்கியுள்ளனர். இது சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார்.

சென்னை ரெனால்ட் நிசான் டெக்., மற்றும் தொழில் மைய துணை தலைவர் ஆனந்தராமன் பிரகாஷ், முதன்மை கல்வி அலுவலர் கோபிதாஸ், கே.எல்.என். கல்லூரி தலைவர் கார்த்திக், செயலாளர் கணேஷ், முதல்வர் ராம்பிரசாத் உட்பட பலர் பேசினர். சி.யு.ஐ.சி., கூடுதல் இயக்குனர் கலைச்செல்வன் நன்றி கூறினார். மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் இருந்து 120 பள்ளிகளை சேர்ந்த 1600 மாணவிகள் பங்கேற்றனர்.



மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் அண்ணா பல்கலை சார்பில் நடந்த மெக்கானிகல் இன்ஜி., படிப்பு குறித்த முகாமில் துணைவேந்தர் சுரப்பா பேசினார். வலமிருந்து கல்லூரி செயலாளர் கணேஷ், தலைவர் கார்த்திக், ஆர்.என்.டி.பி.சி.ஐ., துணைத்தலைவர் ஆனந்தராமன் பிரகாஷ், சி.யு.ஐ.சி., இயக்குனர் தியாகராஜன், சி.இ.ஓ., கோபிதாஸ், சி.யு.ஐ.சி., கூடுதல் இயக்குனர் கலைச்செல்வன்.

uates to embrace a multidis- Chairman and ...

# 'Women contribution can be more in engineering fields'

STAFF REPORTER
MADURAI



**Untapped potential:** Anna University Vice-Chancellor M.K. Surappa speaking at a sensitisation programme for girl students in Madurai on Saturday. • R. ASHOK

Stating that women had potential to become leaders in diverse engineering fields, Anna University Vice-Chancellor M.K. Surappa said that there was a need for increased contribution from women in engineering fields, particularly mechanical engineering.

Speaking at a sensitisation programme organised to encourage Class XI and XII girls from government and government aided schools to take up career in mechanical engineering, he said that there was a wrong perception that engineers always had to work outdoors on highways and construction sites.

He said that technological advancement had enabled a lot of engineering work, involving design and other aspects, to be done indoors with the help of computers.

He said that though the country had a healthy ratio of girl students in educational institutions, the ratio came down in the workforce.

"There is a view that a women's professional career ends when she enters into a married life, which is wrong," he said, adding that government had made a number of policy decisions, including increased maternity leave, so that women could continue to work.

The sensitisation programme, 'Women in Engineering Mechanical (WinMech)' has been launched jointly by the Centre for University - Industry Collaboration (CUIC) in Anna University and Renault Nissan Technology and Business Centre India (RNTBCI).

T. Thyagarajan, Director, CUIC, said that the idea was to increase the abysmally low enrolment of girl students for engineering courses in different mechanical streams.

"Though there are more than 13,000 students studying in mechanical streams in engineering colleges in Tamil Nadu, the percentage of girls is in single digit," he said.

Highlighting that the initiative was being organised as part of the number of corporate social responsibility initiatives done by RNTBCI, Anantharaman Prakash, Deputy Vice President (Engineering) of TNTBCI, said that the automobile industry needed more women in the workforce since they were better innovators.

Around 1,600 students took part in the event hosted by K.L.N. College of Engineering with the support of School Education Department. S. Gopidass, Chief Educational Officer, Madurai, and T. Kalaiselvan, Additional Director, CUIC, also spoke.

# இன்னும் 20 ஆண்டுகளில் பொறியாளர்கள் நிறைய சவால்களை சந்திக்க நேரிடும்


## அண்ணா பல்கலை. துணைவேந்தர் எம்.கே.சூரப்பா

திருப்பரங்குன்றம்/மதுரை, செப். 1: இன்னும் 20 ஆண்டுகளில் பொறியாளர்கள் நிறைய சவால்களை சந்திக்க வேண்டியதிருக்கும் என, அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கே. சூரப்பா தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு, கல்லூரித் தாளாளர் கருமுத்து தி. கண்ணன் தலைமை வகித்தார்.

இதில், அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் எம்.கே. சூரப்பா 1,100 மாணவ, மாணவியருக்கு பட்டங்கள் வழங்கிப் பேசியது: பொறியாளர்கள் இனி வரும் காலங்களில் தனித்துப் பணிபுரிந்தால் போதாது. குழுவாக இணைந்து சமூகத்துக்காக உழைக்க வேண்டும். நம் பணிகளை மட்டும் செய்யாமல் மக்களைப் பற்றி சிந்தித்தும் செயல்பட வேண்டும்.

இன்னும் 20 ஆண்டுகளில் பொறியாளர்கள் நிறைய சவால்களை சந்திக்க நேரிடும். ஆற்றல், சுத்தமான நீர் ஆகியவற்றை மனதில் கொண்டு பொறியாளர்கள் செயல்பட வேண்டும். புதிய கண்டுபிடிப்புகள், கருவிகள் உருவாக்க வேண்டும். புதிய சிந்தனையோடு, புத்தாக்க மனப்பாங்கோடு இந்த உலகம் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். பெருகி வரும் மக்கள் தொகை, இடப் பற்றாக்குறை, உணவுத் தேவை



தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கே.சூரப்பா. உடன், கல்லூரி தாளாளர் கருமுத்து தி.கண்ணன், முதல்வர் வி.அபய்குமார் உள்ளிட்டோர்.

ஆகியவை நமக்கு முன்புள்ள சவால்கள்.

இயற்கை வளங்கள் குறைந்து வரும் தருவாயில், இருக்கும் வளங்களைப் திறம்பட பயன்படுத்தி, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டும். நம்முடன் வாழும் எளிய மனிதர்களையும், அண்டை வீட்டாரையும் முன்னேற்றுவதற்காக வாழ்வதே வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முன்னதாக, முதல்வர் வி. அபய்குமார் வரவேற்றார்.

**மதுரை வேலம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி பட்டமளிப்பு விழா:** மதுரை வேலம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற 7 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில், 588 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவுக்கு, வேலம்மாள் கல்விக் குழுத் தலைவர் எம்.வி. முத்துராமலிங்கம் தலைமை வகித்துப் பேசினார்.

இதில், நாஸ்காம் அமைப்பின் முதுநிலை இயக்குநர் கே. புருஷோத்தமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார்.

கல்லூரியில் 588 மாணவ, மாணவியருக்கு பட்டங்களையும், சிறப்பிடம் வகித்தவர்களுக்குப் பாராட்டுச் சான்று மற்றும் பரிசுகளையும் வழங்கி, அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கே. சூரப்பா பேசியதாவது:

பொறியியல் துறையின் வளர்ச்சியாலே தகவல் தொழில்நுட்பம் மேம்பட்டுள்ளது. எனவே, பொறியியல் துறை பட்டதாரிகள் அனைத்துத் துறைகளின் நவீன வளர்ச்சியிலும் தங்களது பங்களிப்பை தரமுடியும். மக்கள் வாழ்வியலுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பொறியியல் துறை மாணவ, மாணவியர் தங்களது ஆய்வை மேற்கொண்டு நாட்டுக்கும், சமூகத்துக்கும் சேவையாற்ற வேண்டும் என்றார்.

விழாவில், கல்லூரி முதல்வர் பி. அல்லி ஆண்டறிக்கை வாசித்தார். வேலம்மாள் கல்விக்குழும துணைத் தலைவர் கிணேஷ் நடராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கே.எல்.என். தொழில்நுட்பக் கல்லூரி:** அண்ணா பல்கலைக்கழக தொழிற் கூட்டுறவு சங்கமும், பள்ளிக் கல்வித் துறையும் இணைந்து, பிளஸ் 1, பிளஸ் 2 பயிலும் மாணவியருக்கான தொழிற்கல்வி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை, கே.எல்.என். தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் சனிக்கிழமை நடத்தின.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சென்னை அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கே. சூரப்பா பேசியது: பொறியியல் துறை என்றாலே அது கடினமானது என்ற கருத்தே நிலவுகிறது. ஆனால், அது உண்மையல்ல. பொறியியலில் கடினமான எந்திரவியல் பணி என்ற நிலையும், கணினி வருகைக்குப் பிறகு மிகவும் எளிதாகிவிட்டது.

பொறியியல் துறையில் மாணவிகளுக்கு வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ளன. மகளிர் அனைவரும் வீட்டிலிருந்தபடியே கணினி மூலம் பொறியியல் துறையில் பணியாற்றி, அதிக வருவாய் ஈட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலை நாடுகளில் அத்துறையில் பெண்களே அதிகம் உள்ளனர். அந்த நிலை தமிழகத்திலும் ஏற்படவேண்டும். பள்ளி, கல்லூரிகளில் மாணவிகள் அதிகமானோர் பயின்றுவந்தாலும், பொறியியல் துறையில் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர்.

எனவே, மாணவிகள் பொறியியல் துறையைத் தேர்வு செய்து, கற்று வேலைவாய்ப்பை அதிகம் பெறவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், அண்ணா பல்கலைக்கழகத் தொழில் கூட்டுறவு மைய இயக்குநர் தியாகராஜன், கூடுதல் இயக்குநர் கலைச்செல்வன், அனந்தராமன் பிரகாஷ் மற்றும் மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ச. கோபிதாஸ், கே.எல்.என். தொழில்நுட்பக் கல்லூரிச் செயலர் என்.கே. கணேஷ், தலைவர் என்.கே. கார்த்திக், கல்லூரி முதல்வர் ராமசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.